**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் – 55/2022**

**வாதி தரப்பு சாட்சி–1 கருணாகரன் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 22.09.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் தாக்கல் செய்துள்ள தாவா பி பட்டியல் சொத்தில் பிரதிவாதிகள் சாலை போடக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண் 668/2C2 என்பது வண்டிப்பாதை என அ பதிவேட்டில் கண்டுள்ளது என்றால் சரியல்ல, அது எனது பட்டா நிலம். எனது வண்டி வாகனங்கள் செல்ல அமைத்துக கொண்டதாகும். தாவா பி பட்டியல் சொத்து விபரத்தில் 20 அடி அகல வண்டிப்பாதை என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 20 அடி அகல வண்டிப்பாதை என்பதற்கு வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இவ்வழக்கில் மேற்படி 20 அடி அகல வண்டிப்பாதை எனக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன்.

2) நான் சொல்வது தவறு என்றும், விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 24.03.2022 அன்று 5ம் பிரதிவாதி கிராம கணக்குகள் மற்றும் புல படங்களில் மேற்படி இடத்தை அரசு நிலமாக கருதி நடவடிக்கை மேற்கொள்ள 9ம் பிரதிவாதிக்கு செயல்முறை கடிதம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி வண்டிப்பாதை அரசு நிலமாகும், அதை மறைத்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அது எனது சொந்த நிலமாகும்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**